நாள் : 13.04.2007

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**திரு. கு. சீனிவாசன் :– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் வினாவிற்கு விடை அளிப்பார்களா ?**

**சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :– மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை பெரு நகர காவல் ஆணையாளர் அலுவலகம் தற்போது மிகவும் பழைமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. சென்னை போக்குவரத்து காவல் அலுவலக வளாகத்தில், சென்னை காவல் ஆணையாளர் புதிய அலுவலகம் கட்ட அனுமதித்து அரசு ஆணைகள் எண். 223/உள்துறை 12–2–2007 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**திரு. கு. சீனிவாசன் : – முதலமைச்சர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த இடத்தில் கட்டிடம் கட்ட எவ்வளவு ரூபாய் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ? கால நிர்ணயம் ஏதாவது செய்திருக்கிறீர்களா ? இணை ஆணையர் அலுவலகங்களும் அங்கேயே அமைக்கப்படுமா ?**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :– இதற்குச் சற்று விரிவாகவே பதிலளிக்க விரும்புகிறேன். சென்னை மாநகர**

காவல் ஆணையாளர் அலுவலகம் ஒன்று கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. 30–8–2006 அன்று நான் சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மானியம் குறித்து பதிலளிக்கும்போது – "சென்னை, எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள சென்னை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தில் இட வசதி போதுமானதாக இல்லை, தற்போது போக்கு வரத்துப் பிரிவு செயல்படும் பழைய கட்டடத்தை காவல் துறை வீட்டு வசதிக் கழக அதிகாரிகள் ஆய்வு செய்து பயன்படுத்துவதற்கு அது ஏற்றதல்ல என்று அறிவித்துள்ளனர். அந்த வளாகத்தில் 5.5 ஏக்கர் காலி இடம் உள்ளது. அங்கே அனைத்து மாநகர காவல் அலுவலகங்களும் ஒருங்கே செயல்படும் வகையில், (அவர்கள் கேட்ட அந்தப் புதிய கட்டிடம் உட்பட) – அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்று ரூபாய் பதினைந்து கோடி திட்ட மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாகக் கட்டப்படும். இந்த நிதி ஆண்டிலேயே பத்து கோடி ரூபாய் செலவில் முதற்கட்ட வேலைகள் தொடங்கும்" என்று அறிவித்திருந்தேன்.

அதன் தொடர்ச்சியாக காவல் துறை தலைமை இயக்குநர் அனுப்பிய கோப்பில், தரை மற்றும் ஒன்பது மாடிகள் கொண்ட கட்டிடம் ஒன்றை, சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகங்களுக்காக போக்குவரத்துப் பிரிவு வளாகத்தில் 23.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு பரிந்துரை செய்திருந்தார்கள். ஆனால் 20.65 கோடி ரூபாய் அனுமதிக்கலாம்

என்று நிதித் துறை பரிந்துரை செய்திருந்தது. 6.2.2007 அன்று அதையேற்றுக் கொண்டு கையெழுத்திடப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. கு. சீனிவாசன் :— காவல் நிலையங்களுக்கு அதிகாரி களைச் சந்திக்க அந்தப் பகுதிகளிலே உள்ள முக்கியஸ்தர்கள் செல்லும்போது, அவர்களை உபசரிக்கும் வகையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் :— காவல் துறை அலுவலகங் கள் கட்டப்படுவது தான் மூலக் கேள்வி.....

திரு. சீனிவாசன் :— காவல் துறை சம்மந்தப்பட்ட கேள்வி தான். காவல் நிலையத்தில் வருபவர்களை உபசரிக்க காப்பி, டீ வாங்கி வரும் பணியினை தற்போது காவலர்களே செய்து வருகிறார்கள். காவலர்களின் தன்மானம் இதனால் பாதிக்கப்படுகிறது. எல்லா துறைகளிலும் அலுவலக உதவியாளர்கள் இருப்பது போல, காவல் நிலையங்களிலும் அலுவலக உதவியாளர்கள் நியமிக்கப்படுவார் களா ?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :— மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டது போல தன்மானம் காப்பாற்றப்படுகின்ற அளவிற்கு இனி கட்டப்படுகின்ற காவல் நிலையங்கள் கட்டப்படும் (பலத்த சிரிப்பு) என்று தெரிவித்துக் கொள்கிறேன். தன் மானம் காப்பாற்றப்பட வேண்டுமேயானால், கண்ணாடிகளால் அந்தக் கட்டிட சுவர்கள் கட்டப்பட வேண்டும்.

திரு. அர. சக்கரபாணி :– அ.தி.மு.க. ஆட்சியில் தற்போதுள்ள டி.ஜி.பி. அலுவலகத்தை இடித்து விட்டு வேறு புதிய கட்டடம் கட்டப் போவதாக அறிவித்திருந்தார்களே, அது என்னவாயிற்று ?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :– டி.ஜி.பி. அலுவலகத்தை இடிப்பதற்கு கடந்த கால ஆட்சியில் முயற்சி மேற் கொள்ளப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. அதை இடிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்ற போது, முன்னாள் ஐ.ஜி. யாக இருந்த திரு. எப்.வி. அருள் போன்றவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள். அந்தக் கட்டிடம் பழைய காலத்து கட்டிடம், வரலாற்றுப் புகழ் பெற்ற கட்டிடம். இந்தியாவிலேயே கடற்கரை ஓரத் தில் இப்படியொரு அழகான கட்டிடம் காவல் துறைக்காக எங்கும் இல்லை, எனவே அதை இடிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எழுதினார்கள்.

உடனே அந்தப் பணியினை நிறுத்தி விட்டு, மீண்டும் அந்தக் கட்டிடத்தை புதுப்பிக்கும் பணியிலே தி.மு.கழக ஆட்சியில் ஈடுபட்டு, அந்தக் கட்டிடம் அவ்வாறே புதுப்பிக்கப்பட்டு, இப்போது மக்கள் அனைவரும் பார்த்து வியக்கின்ற அளவிற்கு ஒரு சுற்றுலா இயந்திர மாக அது அமைந்திருப்பதை அனைவரும் கவனித்து அதைப் பற்றி புகழ் பாடலாம்.

திரு. அமர மூர்த்தி :– தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை காவல் நிலையங்கள் உள்ளன ? அவற்றில் எத்தனை காவல் நிலையங்கள் அரசு கட்டிடத்தில் இயங்குகின்றன ? எத்தனை

காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றன? அரியலூர் தொகுதியில் நீண்ட நாட்களாக ஒரு காவல் நிலையம் கேட்டு வருகிறேன், அதையும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :– மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு உரிய பதில் – மகளிர் காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1432 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 1148 காவல் நிலையங்கள் அரசு கட்டிடங்களிலும், 248 காவல் நிலையங்கள் தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. மகளிர் காவல் நிலையங்கள் 196 இருக்கின்றன.

திரு. துரை. சந்திரசேகரன் :– மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்ததைப் போல புதிதாக டி.ஜி.பி. அலுவலகம் கட்டும் செயற் குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :– இப்போது இருக்கின்ற டி.ஜி.பி. அலுவலகத்திற்கு பக்கத்தில் கூடுதலாக ஒரு கட்டிடம் கட்டப்படவுள்ளது. தற்போதுள்ள டி.ஜி.பி. அலுவலகமே தாஜ்மகாலுக்கு இணையாகப் பேசப்படுகிறது. அத்துடன் கூடுதல் கட்டிடம் ஒன்றும் கட்டப்படவுள்ளது.

திரு. இ.எஸ்.எஸ். ராமன் :– சென்னை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் கட்டப்படும் பணி தற்போது எந்த நிலை யில் உள்ளது? எப்போது முடிவடையும்?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :— சுமார் இரண்டாண்டு காலத்தில் முடிவடையும்.

செல்வி ராமஜெயம் :— புவனகிரி தொகுதியில் காவல் நிலையம் மிகவும் பழுதுபட்டு உள்ளது. அது போன்ற காவலர் குடியிருப்பும் இல்லாமல் அங்குள்ள காவலர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய காவல் நிலையமும், குடியிருப்பும் அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :— புதிய காவல் நிலையங்கள் கட்டுகின்ற முயற்சி எடுக்கப்படும்போது, புவனகிரியும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. ஆறுமுகம் :— காஞ்சிபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் போதிய இட வசதி இல்லாமல் இருக்கிறது. அதே போன்று டி.ஐ.ஜி. அலுவலகமும் சிறிய இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் மாற்றி, புதிய கட்டிடங்கள் அமைக்கவும், சிங்கப்பெருமாள்கோவில் புறநகர் பகுதியிலே புதிய காவல் நிலையம் அமைக்கவும் ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் :— புதிய காவல் நிலையங்களுடைய பட்டியலில் அதுவும் இடம் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும். மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்படும்.

..............................................................